2024 பிப்ரவரி 13]

சிறு, சிறு பிரச்சினைகள் இருப்பதை, நீங்களே அவையில் இப்போது பேசியிருக்கிறீர்கள். அந்த சிறு, சிறு பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு, முழுமையாகப் பணி நிறைவு செய்யப்பட்ட பிறகு, இந்தப் பேருந்து நிலையம் திறக்கப்பட்டிருந்தால், இந்த விவாதமே நடைபெற்றிருக்காது. அதைத்தான் நாங்கள் குறிப்பிட்டோம்; அறிக்கையாக வெளியிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். போதுமே, நீங்கள். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, சிறு, சிறு பிரச்சினைகள் மட்டுமல்ல; பெரும்பெரும் பிரச்சினைகள் எல்லாம் அங்கே இருந்தன. அவையனைத்தையும் தீர்த்து வைத்துதான் திறந்து வைத்திருக்கிறோம். அவரே சொல்லியிருக்கிறார்; 'இன்னும் ஏதேனும் பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள்; நேரிடையாக வாருங்கள்; அழைத்துச் செல்கிறோம். நீங்கள் சொல்கின்ற குறைகள் இருந்தால், நாங்கள் தீர்த்து வைக்கக் காத்திருக்கிறோம்' என்றுதான் பெருந்தன்மையாகச் சொல்லியிருக்கிறார். எனவே, இத்துடன் இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

தங்கும் விடுதி மற்றும் படித்துறை

***62950—திரு. இராம. கருமாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2024 பிப்ரவரி 13

(அ) திருவாடானை தொகுதி, தேவிப்பட்டினம் அருள்மிகு நவபாஷான நவக்கிரக திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டவும், படித்துறை மதகினைப் புனரமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நவபாஷான நவக்கிரக கோயிலில் படித்துறை மதகினையும், தங்கும் விடுதியையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார். படித்துறை மதகினைப் பொறுத்தளவில் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, அதற்குப் பணி ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் முடிந்து ஊருக்குத் திரும்பியவுடன், படித்துறை மதகினைக் கட்டுகின்ற பணியை உடனடியாகத் தொடங்கலாம் என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பக்தர்களுடைய விடுதி கடற்கரையை ஒட்டியுள்ள பகுதியில் அமைந்திருக்கிறது என்பதால், முறையாக சம்பந்தப்பட்ட துறையிடம் அனுமதி பெற வேண்டியிருக்கின்றது. ஏற்கெனவே, துறையின் சார்பில் அதற்குண்டான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. காலணி பாதுகாப்பிடம், பொருட்கள் பாதுகாக்கும் இடம், மொட்டை அடிப்பதற்குண்டான மண்டபம், பக்தர்கள் குளியல் அறை போன்றவற்றிற்கு ஒப்பந்தம் கோருவதற்காக ஏற்கெனவே திட்டம் தயார் நிலையில் இருக்கின்றது. உரிய துறையினுடைய அனுமதி பெற்றவுடன் அந்தப் பணிக்கும் வெகுவிரைவில் tender கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவிப்பட்டினம், நவபாஷான நவக்கிரகக் கோயிலுக்கு நிதியொதுக்கித் தந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இராமேஸ்வரம் கோயிலுக்குச் செல்லக்கூடிய பெரும்பாலான பக்தர்கள் நவபாஷான நவக்கிரகக் கோயிலுக்கும் சென்று வழிபடக்கூடிய நிலை இருக்கிறது. ஆதலால், அங்கே செய்ய வேண்டிய பணிகளை விரைந்து எவ்வளவு நாட்களுக்குள் செய்து முடிப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 57 இலட்சம் ரூபாய் செலவில் நடைபாதை அமைப்பது உள்ளிட்ட 8 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, ஆணையாளர் அவர்கள் அனுமதியும் தந்துவிட்டார். அதற்கான கால அளவு 9 மாத காலங்கள். ஆகவே, நீங்கள் ஊருக்குத் திரும்பியவுடன் உடனடியாக அந்தப் பணிகளைத் துவக்குகின்றவிதத்தில் பூமி பூஜையை நடத்தி பணிகளை ஆரம்பித்துவிடலாம். அந்தப் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து, 9 மாத ஒப்பந்த கால அளவிற்குள் முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, திருவெற்றியூரில் பிரசித்தி பெற்ற பாகம்பிரியாள் கோயில் அமைந்திருக்கிறது. அந்தக் கோயிலுக்கு அதிகமான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். அந்தப் பகுதியில் சுகாதாரம் இல்லாத நிலை காணப்படுவதால், அந்தக் கோயிலுக்குத் தேவையான கழிவறைகள் மற்றும் பக்தர்கள் வந்து

தங்கும் வகையிலே விடுதிகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த திருக்கோயிலில் ஏற்கெனவே 10 கழிப்பிட வசதிகள் இருக்கின்றன. தொடர்ந்து ஒருங்கிணைந்த கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவதற்காக, 45 இலட்சம் ரூபாய் செலவில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்குண்டான அடிப்படைப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பணிகள் நிறைவேற்றித் தரப்படும். காலப்போக்கில் அந்தத் திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்கள் அதிகமானதால், இதை முன்கூட்டியே அறநிலையத் துறை அறிந்து அதற்குண்டான பணிகளில் ஈடுபட்டிருக்கின்றது. அதேபோல், அந்தத் திருக்கோயிலில் இருக்கின்ற அனைத்துப் பணிகளையும் விரைவாகச் செய்வதற்கு ஒரு செயல் அலுவலரையும் நியமித்து இருக்கின்றோம் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்தர்கள் விடுதியைப் பொறுத்தவரையில், பாகம்பிரியாள் திருக்கோயிலில் ஏற்கெனவே 10 அறைகள் இருக்கின்றன. பக்தர்கள் வருகை அதிகரித்திருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலித்து, நடைபெறவிருக்கும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதக் கூட்டத்தொடரின்போது கூடுதலாக பக்தர்கள் விடுதிகள் கட்டுவதற்குண்டான அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில்

2024 பிப்ரவரி 13]

உள்ள திருக்கோயில்களுக்கு வரக்கூடிய பக்தர்கள் தரும் காணிக்கை நகைகளை உருக்கி, சேமிப்பு வைப்புத் திட்டத்தில் வைத்து பாதுகாக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயிலுக்குக் காணிக்கையாக வருகின்ற பலமாற்று பொன் இனங்கள், மாண்புமிகு முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட அரசாணையின்படி 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடந்த 10 ஆண்டுகளாக அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததால், பல்வேறு திருக்கோயில்களில் நூற்றுக்கணக்கான கிலோ அளவிலான பலமாற்று பொன் இனங்கள் தேங்கியிருந்ததை அறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, இந்த ஆட்சி அமைந்த பிறகு இதுவரையில் 5 திருக்கோயில்களில் பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்கள் உருக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற சுத்த தங்கத்தின் மதிப்பு 191.65 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் ஓர் ஆண்டிற்கு 4 கோடியே 31 இலட்சம் ரூபாய் இந்த 5 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி வட்டித் தொகையாக வருகின்றது. மேலும், 10 திருக்கோயில்களின் சுமார் 156 கிலோ எடையுள்ள பலமாற்று பொன் இனங்கள் 20 ஆம் தேதியன்று ஒன்றிய அரசினுடைய தங்க உருக்காலைக்கு அனுப்புவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன. அவையும் உருக்கப்பட்டு, வைப்பு நிதிக்குச் சென்றால், அந்தத் திருக்கோயில்களுக்கு வருமானம் கிடைக்கும். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, பல்வேறு இடங்களில் பல்வேறு விமர்சனங்கள் வந்தன. தங்க நகையைப் பிடுங்குவது போன்றெல்லாம் கார்ட்டூன்களை வரைந்து வைத்தார்கள். ஆனால், அந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்குவதற்காக, 3 ஓய்வுபெற்ற நீதிபதிகள்

தலைமையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆணையிட்டதன் காரணமாக, தற்போது திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு 6 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருவதோடு, இந்தத் திட்டம் முழுமைபெறும்போது, ஆண்டிற்கு 25 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

வனவிலங்குகள் வருவதைத் தடுத்தல்

***14476—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, ஆணைகட்டி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஆகிய பகுதிகளில் வனவிலங்குகள் வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆணைகட்டி, பெரியநாயக்கன்பாளையம் பகுதிகளில் வனவிலங்குகள் வருகையைத் தடுக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மனித-விலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.*